18th November 1963]

திரு. மு. கருணாநிதி : தேசிய ஒருமைப்பாடு உணர்ச்சியை வளர்க்கும் திட்டத்தின்படி பள்ளிக்கூடங்களுக்கான பாடப்புத்தகங்கள் எழுதப்பட்டனவா ? அந்தப் புத்தகங்களில் 'திராவிடம், திராவிடர்' என்ற சொற்கள் இருக்குமா ? அல்லது விலக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசீயப் பாடலிலேயே 'திராவிடம்' என்ற சொல் இருக்கிறது. கனம் அங்கத்தினர் இதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்.

சர்க்கார் மரக்கிடங்கு (பொள்ளாச்சி)

*236 கேள்வி.—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) பொள்ளாச்சியில் சர்க்காருடைய கிடங்கில் உள்ள மரங்கள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பது உண்மையா ?

(இ) அவைகளின் மதிப்பென்ன ?

(உ) இவைகளை விற்பனை செய்வதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) (இ) : பொள்ளாச்சியிலுள்ள அரசாங்க மரவடியில் மரங்கள் விற்பனையாகாமல் அதிக அளவுக்குத் தேங்கிக் கிடக்க வில்லை. 15-7-1963-ல் 28,804 கன அடி மரமும், 30-9-1963 ல் 23,536 கன அடி மரமும் மரவடியில் விற்பனையாயின. 1963 அக்டோபரில் இருந்த இருப்பு நிலையின்படி, மரவடியில் 53,547 கன அடி மரம் இருப்பில் உள்ளது. அதன் தோராய மதிப்பு ரூ. 2,62,316 ஆகும்.

(உ) கோயம்புத்தூர் தெற்கு டிவிஷனைச் சேர்ந்த ஜில்லா காட்டு அதிகாரி குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை விற்பனைகள் நடத்தி வருகிறார்.

திரு. க. ர. நல்லசிவம் : இந்த மரங்களை வெளி ராஜ்யங்களில் இருந்து அதிகமாக வாங்குகிறார்களா ?

கனம் திரு. ந. நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடியார் : ஏலத்திற்கு எல்லா பாகங்களிலிருந்தும் வந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

*237 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மருத்துவ மனைகள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் திறப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும். ஆனால், தேசீய

[18th November 1963

நெருக்கடியை உத்தேசித்தும், டாக்டர்கள் கிடைக்காமையாலும், புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறப்பது தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

*238 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வேப்பூர் பஞ் சாயத்து யூனியனைச் சேர்ந்த இலப்பைக்குடிக்காட்டில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் திறக்க உத்தேச முண்டா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No.

அனல் மின்சார நிலையம்

259 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் நெய்வேலியைத் தவிர மேலும் எத்தனை இடங் களில் அனல் மின்சார நிலையங்கள் நிறுவ உத்தேசிக்கப் பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: The question of establishing Thermal Power Stations at Tuticorin, Ennore and Cuddalore or Nagapattinam is under consideration.

*240 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1963-ல் அனல் மின் நிலையம் ஒன்று ஆரம்பிக்க உத்தேச முண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: There are certain proposals for starting new Thermal Power stations but none of them is likely to be finalised for execution during 1963.

*241 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the steps taken for stepping up Thermal Generation in Madras State; and

(b) whether these schemes would be included in the Third Plan?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The generating capacity of the Basin Bridge Power House will be increased by the installation of a new 30 M.W. Plant in the place of the existing old one. The Government have also under consideration a proposal to establish three thermal stations of 100 M.W. capacity each in the coastal towns of Tuticorin, Ennore and Nagapattinam or Cuddalore. The Government of India have been addressed in the matter.